## October 1, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. காஸா போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் முன்வைத்துள்ள 20 அம்ச திட்டத்தை ஏற்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார். எனினும், அந்தத் திட்டம் குறித்து பரிசீலித்து வருவதாக ஹமாஸ் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.
   i. காஸாவில் தாக்குதல்களை நிறுத்திவைப்பது, ஹமாஸால் கடத்திச் செல்லப்பட்ட பிணைக் கைதிகளில் இன்னும் உயிருடன் இருக்கக்கூடிய 20 பேரை விடுவிப்பது, ஆயுதங்களைக் கைவிட்டு ஹமாஸ் அமைப்பை கலைப்பது உள்ளிட்ட முக்கிய அம்சங்களைக் கொண்ட அந்த திட்டம், போரை முடிவுக்குக் கொண்டுவரும் வாய்ப்பை மிக நெருக்கத்தில் கொண்டுவந்துள்ளதாக டிரம்ப் கூறினார்.
   ii. மேலும், இந்தத் திட்டத்தை ஏற்க வேண்டும் என்றும் ஹமாஸ் அமைப்பை அவரும் பெஞ்சமின் நெதன்யாகுவும் எச்சரித்தனர்.
   iii. முன்னதாக, ஐ.நா. பொதுச் சபையின் 80-ஆவது கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்கா வந்துள்ள நெதன்யாகு, காஸா போர் நிறுத்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அதிபர் டிரம்ப்பை வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசினார்.
2. ஆசிய நீச்சல் சாம்பியன்ஷிப்பில் (அகமதாபாத்) இந்தியாவின் ஸ்ரீஹரி நட்ராஜ் தனது 5-ஆவது பதக்கத்தை வென்று அசத்தியுள்ளார்.
3. முதல்வர் கோப்பை மாநில விளையாட்டுப் போட்டிகளுக்கு மொத்தம் ரூ.37 கோடி பரிசுத் தொகை வழங்கப்படுகிறது என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
   இதுதொடர்பாக அவர் கூறியதாவது:
   i. விளையாட்டு கலாச்சாரத்தை வளர்ப்பதற்கும், ஒவ்வொரு மட்டத்திலும் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கும், மாநிலம் முழுவதும் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு அங்கீகாரம் மற்றும் வெகுமதிகளை வழங்குவதற்கும் தமிழக அரசு எடுத்துள்ள மற்றொரு முக்கிய நடவடிக்கையாகும். விளையாட்டு வீரர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குவதில் கடந்த சில ஆண்டுகளாக, தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக உருவெடுத்துள்ளது.
   ii. நிகழாண்டு வட்டார, மாவட்ட அளவிலான போட்டிகள் நடைபெற்று அக். 2-இல் மாநில அளவிலான போட்டிகள் தொடங்குகின்றன.
4. உலக பாரா தடகள சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற இந்திய ஈட்டி எறிதல்வீரர் சுமித் அன்டில், போட்டியின் வர லாற்றில் 3 முறை சாம்பியனான ஒரே இந்தியராக சாதனை படைத்தார்.
   i. எஃப்64 பிரிவில் அவர், 71.37 மீட்டரை எட்டி, சாம்பியன்ஷிப் சாதனையுடன் தங்கத்தை தட்டிச் சென்றார். இதற்கு முன், 2023-இல் அவரே 70.83 மீட்டரை எட்டியது சாதனையாக இருந்தது.
   ii. போட்டியில் கடந்த 2023, 2024-இல் சாம்பியனான சுமித்துக்கு, இது 'ஹாட்ரிக்' தங்கமாக அமைந்தது.
5. அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதத்துக்குள் ஹெச்-1பி விசா (நுழைவு இசைவு) நடைமுறையில் பல்வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என அமெரிக்க வர்த்தகத் துறை அமைச்சர் ஹோவர்ட் லுட்னிக் தெரிவித்தார்.
   i. ஹெச்-1பி விசா கட்டணத்தை ரூ.1.47 லட்சத்தில் இருந்து ரூ.88 லட்சமாக (1 லட்சம் டாலர்) உயர்த்தும் உத்தரவில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அண்மையில் கையொப்பமிட்டார்.

ii. ஒருமுறை மட்டுமே செலுத்தக் கூடிய இந்த கட்டணம் 2026-ஆம் நிதியாண்டு காலத்துக்கு விண்ணப்பித்தவர்கள் உள்பட செப்.21-ஆம் தேதிக்குப் பிறகு விண்ணப்பித்தவர்களுக்கு மட்டுமே பொருந்தும். அதற்கு முன்பாக விண்ணப்பித்தவர்கள், புதுப்பிப்பதற்காக விண்ணப் பத்தை சமர்ப்பித்தவர்கள் மற்றும் அமெரிக்காவில் மீண்டும் நுழையும் ஹெச்-1பி விசாதாரர்களுக்கு இந்தப் புதிய கட்டணம் பொருந்தாது என அமெரிக்க அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

iii. இதுதொடர்பாக அமெரிக்க ஊடகத்துக்கு கடந்த அவர் அளித்த பேட்டியில், 'ஹெச்-1பி விசா கட்டண உயர்வு அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் அமலாகவுள்ளது. அதற்குள் ஹெச்-1பி விசா நடைமுறையில் பல்வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தப் புதிய கட்டணத்தை ஒருமுறை மட்டும் செலுத்தினால் போதும்.

iv. 1990-களில் ஹெச்-1பி விசா நடைமுறை உருவாக்கப்பட்டது. இந்த விசாவுக்கு விண்ணப்பம் செய்பவர்கள் லாட்டரி முறையில் (குலுக்கல் முறை) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

6. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) உயர்ந்த, குறைந்த வருவாய் கொண்ட மாநிலங்கள் இடையே அதிக இடைவெளி காணப்படுவது கவலைக்குரியது என்று நீதி ஆயோக் (மத்திய கொள்கைக் குழு)சுமன் பெரி தெரிவித்தார்.

   i. நாட்டின் 26 சதவீத மக்கள்தொகையை பிரதிநிதித்துவப்படுத்தும் உயர் வருவாய் கொண்ட மாநிலங்கள், நாட்டின் ஜிடிபி-க்கு 44 சதவீதம் பங்களிக்கின்றன. அதேநேரம், 38 சதவீத மக்கள் தொகையை பிரதிநிதித்துவப்படுத்தும் குறைந்த வருவாய் மாநிலங்கள், வெறும் 19 சதவீதமே பங்களிக்கின்றன. இந்த இடைவெளி கவலைக்குரியது.

7. செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-

   i. யானிக் சின்னர் - இத்தாலிய டென்னிஸ் வீரர்
   ii. கற்பவர் டியென் - அமெரிக்க டென்னிஸ் வீரர்
   iii. கார்லோஸ் அல்கராஸ் - ஸ்பெயின் டென்னிஸ் வீரர்
   iv. தீப்தி சர்மா மற்றும் அமன்ஜோத் கவுர் - இந்திய பெண்கள் கிரிக்கெட் வீரர்கள்